## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.35/2015

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆஞ்சநேயன் | மதம் | : இந்து |
| த/பெ | : கோடுரு நாகிரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 63 | கிராமம் | : ராமலிங்காபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**08.01.2025**

**<u>பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

16. நான் தாக்கல் செய்த அ.வ.எண்.32/2012 வழக்கில் இந்த வழக்கின் வாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் நான் என்ன அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என குறிப்பிட்டுள்ளார் என்றால் அவர் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிடவில்லை. நான் என் அளவிற்குதான் வீடு கட்டியுள்ளேன். நான் தாக்கல் செய்த அ.வ.எண்.32/2012 வழக்கில் இந்த வழக்கின் வாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் நான் என்ன அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என குறிப்பிட்டுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அவருக்கு பட்டாவே தவறாக கொடுக்கப்பட்டுள்ளது.

17. இந்த வாதி நான் சுமார் 3 அடி ஆக்கிரமிப்பு செய்ததாக இந்த வழக்கை ஆரம்பத்தில் தாக்கல் செய்தார் என்றால் நான் 100 அடிக்கு 18 1/2 அடி என் பத்திரத்தில் உள்ளவாறுதான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.32/2012 வழக்கில் ஆணையர் நியமணம் கோரி மனுதாக்கல் செய்தேனா என்றால் நில அளவையர் நியமணம் கோரவில்லை. ஆனால் ஆணையர் நியமணம் கோரியுள்ளேன். நான் அவ்வாறு ஆணையர் நியமணமே கோரவில்லை என்றால் நான் கோரவில்லை. இந்த வழக்கிற்கு பின்பு நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளந்து நான் 2 1/2 அடி ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் தவறாகதான் குறிப்பிட்டுள்ளார். நான் என்னிடத்தில்தான் கட்டியுள்ளேன்.

18. கிராமத்தில் ஆடு, மாடு வளர்க்க வீட்டின் இரு பக்கமும் சந்து விடுவார்கள் என்றால் அவர் எனது இடத்தின் பக்கம் சந்தே விடவில்லை. வாதி வீட்டிற்கும் எனது இடத்திற்கும் நடுவே எவ்வளவு இடம் இருக்கும் என்றால் தோராயமாக 15 அடி இருக்கும். அந்த 15 அடியும் காலியாக உள்ளது என்றால் சரிதான். அந்த காலியிடம் வழியாகதான் பின்னால் உள்ள இடத்திற்கு வாதி செல்கிறார் என்றால் சரிதான். அந்த 15 அடியை ஒட்டி நானோ வாதியோ சுற்றுச்சுவர் கட்டவில்லை என்றால் அது 15 அடி இருக்காது. 10 அடியும் இருக்கலாம். எனக்கு அடியளவு சரியாக தெரியாது. வாதி என் இடம் உள்ள பக்கத்தில் எத்தனை அடிக்கு சுற்றுச்சுவர் கட்டியுள்ளார் என்றால் 50 அடி நீளம் ஏறக்குறைய இருக்கும். அவர் கூடுதலாக கட்டியுள்ளார்.

19. நீதிமன்ற ஆணையர் வரும் போது மேற்படி மதில்சுவர் இருந்ததா என்றால் அப்போதும் இருந்தது. இப்போதும் இருக்கிறது. நான் எனது 18 1/2 அடியில் 1/2 அடியை விட்டு நான் வீடு கட்டியுள்ளேன். நான் அந்த சமயத்தில் சிமெண்டால் ஆன நான்கு கற்களை நிறுத்தி வைத்து மேலே சிமெண்ட் சீட்டு போட்டிருந்தேன் என்றால் இல்லை. அது சிமெண்ட் சீட்டு போட்ட வீடு போலதான் உள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் அவ்வாறு வீடு போல கட்டியிருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றாலும் மெண்டால் ஆன நான்கு கற்களை நிறுத்தி வைத்து மேலே சிமெண்ட் சீட்டு போட்டிருந்ததாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வீடு எப்படி கட்டுவார்களோ அப்படிதான் நான் அதை கட்டியுள்ளேன்.

20. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எனது சொத்தான பி அட்டவணைக்கு அருகில் மதில்சுவர் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் மதில்சுவர் அன்றும் இருந்தது. இன்றும் இருக்கிறது. காலியாக இருந்த இடத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்து நான் மதில்சுவர் எழுப்பியுள்ளேன் என்றால் மதில்சுவர் அன்றும் இருந்தது. இன்றும் இருக்கிறது. தாவா பி அட்டவணை சொத்தை தெரிந்தே நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் அதை இடித்து ஒப்படைக்க நான் கடமைப்பட்டவன் என்றால் பொய். நான் ஆக்கிரமிப்பே செய்யவில்லை.

21. வாதி தன் வீட்டின் தெற்கேயும் சிறிது இடம் விட்டுள்ளார் என்றால் சரிதான். என் பக்கம் வாதிக்கு 1/2 தான் உள்ளது என்பதை எனது எதிர்வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு விற்பனை செய்தவர் காலியிடமாகதான் கொடுத்தார்

என்றால் சரிதான். நான் 1996 ல் வாங்கிய பின்பு கால்நடைக்கு கொட்டகை 2012 ல் போட்டேன் என்றால் ஆமாம். அப்போது வாதி என்னிடம் அது தனது இடம் என்றும் அந்த இடத்தை விட்டு கொட்டகை போட கேட்டார் என்றால் அது எனது இடம் என்றுதான் சொன்னேன். வாதி தகராறு செய்த பின்புதான் நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம்.

22. நான் பி அட்டவணை சொத்தை எனக்கு விற்பனை செய்த சல்லா முனுசாமிக்கோ அல்லது அவருக்கு கிரையம் கொடுத்தவருக்கோ பாத்தியமாக இருந்தது என்பதை காட்ட SLR தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த இடத்தை 1996 முதல் 2012 வரை நான் அனுபவித்து வந்தேன் என்பதை காட்ட நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். வாதி நான் தாக்கல் செய்த வழக்கில் அவர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வாதிக்கு சொந்தமான சொத்தின் அளவுகளை குறிப்பிட்டுள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் அவருக்கு 30 அடிதான் உள்ளது.

23. எனக்கு வாதிக்கும் வடக்கு தெற்கு 2 1/2 அடி கிழக்கு மேற்கு 48 அடி மட்டும்தான் பிரச்சனை என்றால் சரிதான். வாதியின் வீடு தொகுப்பு வீடு என்றால் முதலில் பூர்வீக வீடு இருந்தது. அதில் அவர் அப்பா இருந்தார். அதன் பின்புதான் தொகுப்பு வீடு வாதி கட்டினார். அந்த தொகுப்பு வீடு அரசாங்க மானியத்தில் கட்டப்படுவது என்றால் சரிதான். வாதிக்கு ஏ அட்டவணை சொத்து முழுவதும் உரிமையானது என்றும் நான் பி அட்டவணையில் தவறாக ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் அதை இடித்து வாதிக்கு கொடுக்க கடமைப்பட்டவன் என்றால் பொய். நான் வாதி இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. வாதிக்கோரியப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)